அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

## 2021/2022

# தமிழ்

## ஆண்டு 5

| | |
|---|---|
| **நேரம்:** 120 மணித்துளிகள்<br><br>**நாள்:** 29.01.2022 | **மொத்தப்புள்ளிகள்:** 80<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br><br>**பக்கங்கள்:** 12 |
| **பெயர்:** | |
| **தமிழ்ப்பள்ளி:** | |

## பகுதி 1 - எழுதுதல்

**1. பொருத்தமான விடையின் முன் புள்ளடியிடுக.**

1. தமிழிலுள்ள மெய்யெழுத்துகளின் எண்ணிக்கை
   - ☐ பதினெட்டு ☐ முப்பது ☐ பன்னிரண்டு

2. அஃறிணையைக் குறிக்கும் சொல்
   - ☐ ஓடினார் ☐ பந்து ☐ ஆசிரியர்

3. ஆடியும் பாடியும் நடிக்கும் கலை
   - ☐ ஓவியம் ☐ சிற்பம் ☐ கூத்து

4. தலைவனுக்குத் தலைவி போல பாடகனுக்கு
   - ☐ பாடினி ☐ பாடகி ☐ பாடகள்

5. நண்பன் என்பதன் ஒத்தபொருட்சொல்
   - ☐ பகைவன் ☐ தோழன் ☐ கயவன்

6. தோற்கருவி வகைகளுள் ஒன்று
   - ☐ யாழ் ☐ பறை ☐ குழல்

7. வைத்தான் என்ற வினைச்சொல்லின் நிகழ்கால வடிவம்
   - ☐ வைக்கிறான் ☐ வைப்பான் ☐ வை

8. இளமை என்பதன் எதிர்ப்பொருட்சொல்
   - ☐ முதுமை ☐ மறுமை ☐ பழைமை

9. தமிழரின் கட்டடக்கலைக்குச் சான்றாக விளங்குவது
   - ☐ மாமல்லபுரம் ☐ சித்தன்னவாசல் ☐ தஞ்சைப் பெரிய கோவில்

10. புறாக்கள் என்பது
    - ☐ ஒன்றன்பால் ☐ பலர்பால் ☐ பலவின்பால்

11. வாறன் என்ற பேச்சுவழக்குச் சொல்லின் எழுத்துவழக்கு வடிவம்

☐ வருகிறேன் ☐ வருகிறோம் ☐ வந்தேன்

12. இயல் இசை நாடகம் எனும் மூன்றும் சேர்ந்தது

☐ செந்தமிழ் ☐ முத்தமிழ் ☐ பைந்தமிழ்

13. நான் பள்ளிக்குச் செல்லவில்லை. ____________, எனக்கு உடல் நலமில்லை.

☐ ஆனால் ☐ ஏனென்றால் ☐ அதனால்

14. ஒரு சொல்லியத்தில் கருத்து முடியும் இடம்

☐ செயப்படுபொருள் ☐ பயனிலை ☐ எழுவாய்

15. பாட்டுகள் மூலமாக இந்திய மக்களுக்கு விடுதலை உணர்வை ஊட்டியவர்

☐ பாரதியார் ☐ ஔவையார் ☐ இளங்கோ அடிகள்

(15×1=15 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் சொல்லியங்களில் எழுவாய், செயப்படுபொருள், பயனிலையைத் தெரிவுசெய்து எழுதுக.**

1. கயல்விழி பழங்களை வாங்கினாள்.
2. நான் தாயகம் பற்றிய கட்டுரையை எழுதினேன்.
3. கிளி பழுத்த பழத்தைக் கொத்தியது.

| இல | எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

(9×1=9 புள்ளிகள்)

**3. பொருத்தமான முடிக்கும் சொற்களைத் தெரிவுசெய்து எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| உடையவர் | வீசுகிறது | பேணுவோம் | நின்றது | சிறந்திருந்தனர் |

1. ஆற்றங்கரையில் ஆலமரம் ______________________________.

2. நாம் இயற்கை வளங்களைப் ______________________________.

3. எனது அப்பா மொழியறிவு ______________________________.

4. பூக்களிலிருந்து நறுமணம் ______________________________.

5. தமிழர் ஆடற்கலையில் ______________________________.

(5×1=5 புள்ளிகள்)

**4. கீழ்க்காணும் சொற்களை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

1. கோடைகாலம் ____________________

2. செய்தித்தாள் ____________________

3. மருத்துவமனை ____________________

4. தொடருந்து ____________________

5. இசைக்கருவி ____________________

6. நூலகம் ____________________

(6×1=6 புள்ளிகள்)

**5. பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.**

| இன்பதுன்பம் | அல்லும்பகலும் | ஆடிப்பாடி |
|---|---|---|
| வளைந்துநெளிந்து | அக்கம்பக்கம் | |

1. மலைப்பாதை ______________________ செல்கிறது.
2. வாழ்வில் ______________________ மாறிமாறி வரும்.
3. தெருவில் ______________________ பார்த்து நடக்க வேண்டும்.
4. அப்பா எமக்காக ______________________ வேலை செய்கிறார்.
5. சிறுவர் ______________________ மகிழ்ந்தனர்.

(5×1=5 புள்ளிகள்)

**6. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. இளங்கோவடிகள் எழுதிய நூல் எது?

   ______________________________________

2. நாம் உயிரினும் மேலானதாகப் பேணவேண்டியது எது?

   ______________________________________

3. செயலைக் குறிக்கும் சொற்கள் இரண்டு எழுதுக.

   ______________________________________

4. இன்கலைகளுள் இரண்டினை எழுதுக.

   ______________________________________

5. உயர்திணைக்குரிய பால்களுள் இரண்டினை எழுதுக.

   ______________________________________

(5×2=10 புள்ளிகள்)

**7. கீழ்க்காணும் தலைப்புகளில் ஒன்றைப் பற்றி 50 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. பாரதியார்   2. தமிழர்கலைகள்   3. மாலைக்காட்சி

(15 புள்ளிகள்)

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. கீழ்க்காணும் பந்தியை வாசித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.**

தமிழரது முதன்மையான கொண்டாட்டங்கள் தைப்பொங்கல், ஆடிப்பிறப்பு ஆகும். தை முதலாம் நாள் தைப்பொங்கலும் ஆடி முதலாம் நாள் ஆடிப்பிறப்பும் கொண்டாடப்படுகிறது. தமிழர் ஆடிப்பிறப்பை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவர். ஏனென்றால், பயறு, உழுந்து, வேர்க்கடலை போன்ற சிறு கூலங்கள் விளைந்து பயன் தரும் காலம் இதுவாகும். ஆடிப்பிறப்பன்று கொழுக்கட்டை செய்வர். அத்துடன் ஆடிக்கூழ் காய்ச்சுவர். அரிசிமா, பனங்கட்டி, பயறு போன்றவற்றை ஆடிக்கூழ் காய்ச்சுவதற்குப் பயன்படுத்துவர். உறவுகளோடு கூடி, ஆடிக்கூழ் குடித்து மகிழ்வது ஆடிப்பிறப்பின் சிறப்பு நிகழ்வாகும். ஆடிப்பிறப்பின் சிறப்பினைச் சோமசுந்தரப் புலவர் "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை" என்ற பாடல் மூலம் கூறியுள்ளார். தாயகத்திலும் தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் ஆடிப்பிறப்பு கொண்டாடப்பட்டு வருகிறது.

1. தமிழரது முதன்மையான கொண்டாட்டங்கள் எவை?

_______________________________________________

2. சிறுகூலங்கள் இரண்டு எழுதுக.

_______________________________________________

3. ஆடிப்பிறப்பு எப்போது கொண்டாடப்படுகிறது?

_______________________________________________

4. ஆடிப்பிறப்பின் சிறப்பு நிகழ்வு எது?

_______________________________________________

5. "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை" என்ற பாடலைப் பாடியவர் யார்?

_______________________________________________

(5×2=10 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் குறிப்புகளைப் படித்து, சொல்லியங்கள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( × ) எனவும் அடையாளம் இடுக.**

**சுற்றுலாக் குறிப்பு**

ஆண்டு 5இல் படிக்கும் கீரன் தனது வகுப்பு மாணவர்களுடன் சுற்றுலாச் சென்றான். அன்றையநாள் 6:30 மணிக்கு நித்திரை விட்டு எழுந்தான். 7:00 மணிக்குக் காலை உணவு உண்டான். 7:30 மணிக்கு அப்பாவுடன் பள்ளிக்குச் சென்றான். 7:45 மணிக்கு வகுப்பு ஆசிரியர் மாணவர்களை ஒழுங்குபடுத்தினார். முதலில் அனைவரும் தொடருந்து நிலையத்திற்கு நடந்து சென்றனர். அங்கிருந்து 8:10 மணிக்குத் தொடருந்தில் விலங்ககத்திற்குச் சென்றனர். விலங்ககத்தில் பல்வேறு விலங்குகளைப் பார்வையிட்டனர். 16:00 மணிக்கு அங்கிருந்து திரும்பினார்கள். 17:30 மணிக்குப் பள்ளியிலிருந்து அம்மா வீட்டுக்கு அழைத்து வந்தார்.

1. கீரன் ஆண்டு 5 மாணவர்களுடன் சுற்றுலாச் சென்றான். ( )
2. சுற்றுலாச் சென்ற நாளில் 7:00 மணிக்கு நித்திரை விட்டு எழுந்தான். ( )
3. பள்ளியில் மாணவர்களை ஒழுங்குபடுத்தியவர் வகுப்பு ஆசிரியர். ( )
4. தொடருந்து நிலையத்திற்கு நடந்து சென்றனர். ( )
5. பள்ளியிலிருந்து வீட்டுக்கு அழைத்து வந்தவர் அப்பா. ( )

(5×1=5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 15 | | | |
| 2 | 09 | | | |
| 3 | 05 | | | |
| 4 | 06 | | | |
| 5 | 05 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |